



# ஜெபமே ஜீவன்
# ஜெபமே ஜெயம்




## இந்திய கிறிஸ்துவின் சபை
## மதுரை

பிப்ரவரி மாத ஜெப கையேடு

பிப்ரவரி 2019

<u>நாள் 1</u>

### தேவன் உங்களை அன்பு செய்கிறார்

**நோக்கம்:**
இப்பாடத்தின் இரு முக்கிய நோக்கங்கள் என்னவென்றால் சீஷர்களுக்கு வேதத்தின் அடிப்படையில் தேவனைப்பற்றிய உண்மையான தோற்றத்தை போதிப்பது மற்றும் அவர்களை தினமும் தேவனுடனான உறவுமுறையை வளர்க்க உற்சாகப்படுத்துவதுமாகும்.

கே:நீங்கள் வாழ்க்கையில்வளர்ந்து வரும்போது சந்தித்த அனுபவங்கள் தேவனைப்பற்றிய தோற்றத்தை உங்களுக்கு எப்படி வடிவமைத்தது?
கே:உங்கள் தந்தையோடு இருந்த உறவுமுறை எப்படி இருந்தது? அதிகாரத்தை பற்றி உங்களுடைய கருத்து என்ன? உங்கள் கடந்த கால வாழ்க்கையில் அதிகாரத்தால் ஏற்பட்ட எதாவது கசப்பான அனுபவங்கள் உண்டா?

நாம் இந்த உலகத்தில் வைத்திருக்கும் நம்முடைய தந்தையுடன் உண்டான உறவுமுறை மற்றும் அதிகாரத்தால் ஏற்படுத்திய அனுபவங்கள் தான், நாம் தேவனை எப்படி பார்க்கிறோம் என்பதை தீர்மானித்திருக்கிறது. தேவன் ஒருபோதும் தூரமானவரோ, விலகியோ, நம்மிடம் விருப்பமில்லாதவரோ; கோபம் அடைபவரோ எரிச்சல் அடைபவரோ; அன்பு செய்யாதவரோ அல்லது நீதியில்லாதவரோ கிடையாது.தேவன் எந்த பிழையுமில்லாதவரும் நம்மிடம் தினந்தோறும் உண்மையான உறவுமுறை வைத்துக்கொள்ள விரும்புகிறவருமாக இருக்கிறார்.

### நீங்கள் தேவனுக்கு முக்கியமான நபர்

**லூக்கா 15:3-6**
நீங்கள் ஒருவர் தான் காப்பாற்றபட வேண்டியவராக இருந்தாலும் …….. உங்களுக்காக நிச்சயம் அவர் ஓடி வந்திருப்பார்! உங்கள் மீது மிகவும் அதிகமாக அன்பு செய்கிறார். இப்படியாகத்தான் தேவன் இருக்கிறார்.

### நீங்கள் தேவனுக்கு விலையேறப் பெற்றவர்

**லூக்கா 15:8-10**
கே:நீங்கள் தொலைத்த ஏதாவது ஒரு பொருளை மிக ஆர்வமாக தேடியிருக்கிறீர்களா? அது என்ன?

கே:ஒரு ரூபாய்க்காக குப்பைகளில் தேடிப்பார்ப்பீர்களா? அல்லது அது ஒரு 1000ரூபாயாக இருந்தாலோ அல்லது பரிசு விழுந்த லாட்டரி சீட்டாக இருந்தால்?
நாம் ஒரு பொருளை ஆர்வத்துடன் தேடுவதும் மறுபடியும் அதை கண்டுபிடிப்பதும் (நம்மை கறைபடுத்துவதற்கும்) அந்த பொருளின் மதிப்பை பொறுத்திருக்கிறது. வேதத்தில் பல வசனங்கள் நாம் எந்த அளவிற்கு தேவனுக்கு விலையேற பெற்றவர்கள் என்பதை தெரிவிக்கிறது. பழைய ஏற்பாட்டில், தேவன் தமது ஜனங்களை “சொந்த ஜனங்கள்” (யாத் 19:5, உபா 7:6, 26:14, 18:2, சங்கீதம் 135:4) என்று சொல்லியிருக்கிறார். புதிய ஏற்பாட்டில், குமாரர் குமாரத்திகள் என்றும், ஆசாரிய கூட்டம், தெரிந்து கொள்ளப்பட்ட ஜனம், பரிசுத்த தேசம், சரீரம், கிறிஸ்துவின் மணவாட்டி மற்றும் நம்மை அன்பு செய்ததற்காக தமது சொந்த குமாரனை நமக்காக சிலுவையில் ஒப்புக்கொடுத்தார் என்றும் சொல்லியிருக்கிறார். (எபே 1:4-8, 1 பேதுரு 2:9, யோவான்3:16)
நாம் தேவனுக்கு மிகவும் விலையேற பெற்றவர்கள் என்று வேதம் கூறுகிறது!

சங்கீதம் 40:1-4

கே:எந்த சேற்றிலிருந்து தேவன் உங்களை காப்பாற்றினார்?

## தேவன் உங்களுடன் இருக்க விரும்புகிறார்

**லூக்கா 15:11-32**

கே: நீங்கள் பாவம் செய்து தேவனை காயப்படுத்தும் போது, தேவனுடன் நேரம் செலவழிக்க அது தடங்கலாக இருக்கிறதா?

கே:கெட்ட குமாரன் தான் தவறு செய்த பின்பு தொடக்கத்திலேயே தன் தகப்பனிடம் வர விரும்பினான் என்று நினைக்கிறீர்களா? தன் தகப்பனிடம் வர

கே:மகன் திரும்பி வந்தவுடன் அவனுடைய தகப்பனாரின் பதில் என்னவாக இருந்தது?மகனிடமுள்ள தகப்பனுடைய அன்பை விவரியுங்கள்.

கே:நீங்கள் மனந்திரும்பி தேவனிடம் வருவதை விட தொடர்ந்து அந்த பாவ சேற்றில் இருக்க விரும்பும் போது தேவன் எப்படி உணருவார்?

கே:நீங்கள் மறுபடியும் மனந்திரும்பி அவரிடம் வந்து நேரம் செலவழிக்க விரும்பும் போது தேவன் எப்படி உணருவார்?

தேவன் நம்மை அன்பு செய்கிறார். மற்றும் நம்முடன் தினந்தோறும் உறவுமுறை வைத்துக் கொள்ள விரும்புகிறார். ஆனால் நாம் செய்யும் தவறு என்னவென்றால் தேவன் நம்மை அன்பு செய்ததை மறந்து, சாத்தான் சொல்கிறபடி அந்த பன்றிகளோடு இருக்கவும் (சேற்றில் இருக்கவும்) அல்லது நாம் திரும்ப சென்றால் தேவன் நம்மை ஏற்றுக் கொள்ளமாட்டார் என்ற எண்ணத்தோடும் அவரிடம் செல்லாமல் இருக்கிறோம்.

**செயல்முறை :** உங்களுடைய வளாந்த விதம் எப்படி என்றும் அது எப்படி நீங்கள் தேவன் மீது வைத்துள்ள கண்ணோட்டத்தை மாற்றினது என்றும் சிறுது நேரம் எடுத்துக்கொண்டு எழுதுங்கள். வேதம் சொல்லுகிறபடி தேவனை புரிந்து கொள்ளும் தோற்றத்திற்காக முயற்சி செய்யுங்கள்.

நாள் 2 **தேவனோடு பேசுவது**

கே:உறவுமுறையில் தொடர்பு கொள்ளுதல் என்பது எந்த அளவிற்கு முக்கியத்துவம் கொண்டது? நன்றாக தொடர்பு கொள்ளுதல் தான் உறவுமுறைக்கு சிறந்த செயல் ஆகும். தேவனோடு உறவுமுறை வைத்துகொள்ளுவதற்கும் தொடர்பு கொள்ளுதல் முக்கியமானதாகும். நாம் ஜெபிக்கும் போது தேவனோடு பேசவும் அவரிடமிருந்து தனிப்பட்ட முறையில் கேட்கவும் செய்கிறோம்.

**வசனங்கள்** மாற்கு 1:35

இயேசு அதிக வேலை நிறைந்த மனிதராக இருந்தாலும், தேவனுடன் ஜெபிப்பதற்க்காக வனாந்திரமான இடத்திற்கு செல்ல நேரம் ஒதுக்கினார்.

கே: நீங்கள் தேவனிடத்தில் ஜெபிப்பதற்கு நேரம் மற்றும் ஒதுக்குவதற்கு இடத்தை எந்தெந்த காரியங்கள் பெரிய சவால்களாக இருக்கிறது?

## எதற்காக நாம் ஜெபிக்க வேண்டும்?

**லூக்கா11:1-4**

"அன்றன்றுள்ள அப்பத்தை தாரும்"...... ஒரு முதல் நூற்றாண்டு யூதர் 'அனுதின அப்பம்' என்ற வார்த்தையை கேட்டவுடன் உடனடியாக அவருக்கு யாத்திராகமத்தில் கிடைத்த மன்னா நினைவிற்கு வரும். யாத்திரகமமம் 16-ம் அதிகாரத்தில் இஸ்ரவேலர்கள் தங்கள் பெலத்திற்காக தேவனை சார்ந்திருக்க வேண்டியிருந்தது. அவர்கள் மன்னாவை சேகரித்தவுடன் அது ஒரு நாளைக்கு மட்டும்தான் பயன்படுத்த முடியும். (அதிகமாக சேகரித்தால் கெட்டு போய்விடும்). இந்த காரியம் இஸ்ரவேலர் பிழைப்பதற்காக தேவனை அனுதினமும் சார்ந்திருக்க வைத்தது.

அதே போல் நாமும் வாரத்திற்கு ஒருமுறை மட்டும் கிறிஸ்துவத்தை பின்பற்றாமல்அனுதினமும் தேவனை சார்ந்திருக்க வேண்டும். நாம் வாரத்திற்கு ஒருமுறை மட்டும் அந்யோன்யத்தில் கலந்து கொள்வதிலும், ஆராதனையில் கலந்து கொள்வதால் மட்டும் நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கை நிலைத்திருக்காது. இஸ்ரவேலர்களை போல் அறுதினமும் நம்முடைய பெலத்திற்காக தொடர்ந்து தேவனை சார்ந்திருக்க வேண்டும்.

கே:ஒருவேளை இஸ்ரவேலர்கள் அனுதினமும் மன்னாவிற்காக செல்லாதிருந்தால் என்ன நடந்திருக்கும்?

கே:நாம் தேவனோடு அனுதினமும் நேரம் செலவழிக்காமல் இருந்தால் நமக்கு என்ன நேரிடும்? இயேசு இந்த அடிப்படையான இந்த மாதிரியை சீஷர்களுக்கு ஜெபம் செய்ய கற்று தந்தார்.

- "எங்கள்பிதாவே" -தேவனைபறைசாற்றுதல்
-" நாமம் மகிமைப்படுவதாக" – தேவனை துதித்தல்
( உற்சாகபடுத்துவதற்காக சங்கீதங்களை படியுங்கள்)
-" உம்முடைய இராஜ்ஜியம் வருவதாக" மற்றவர்களுக்காக ஜெபித்தல் (சபை, குடும்பம், எதிரிகள், தலைவர்கள் மற்றும் நீங்கள் யாரை பரலோகத்தில் பார்க்க விரும்புகிறீர்களோ அவர்களுக்காக)
-"அனுதின அப்பத்தை எங்களுக்கு தாரும்"-
அனுதின தேவைகளுக்காக ஜெபத்தல் (ஆவிக்குரிய காரியங்கள், உணர்வு பூர்வமான தேவைகள், சரீர தேவைகள் மற்றும் அந்த நாளில் நடக்கும் ஒவ்வொரு செயலுக்காவும் ஜெபியுங்கள்)
"எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும்"
– பாவங்களை அறிக்கை செய்து மன்னிப்பிற்காக ஜெபியுங்கள். (உங்கள் தனிப்பட்ட பாவங்களுக்காக ஜெபியுங்கள். நீங்கள் எந்த அளவிற்கு உங்கள் பாவங்களை பற்றி அறிந்திருக்கிறீர்களோ அந்த அளவிற்கு தேவனுக்கு நன்றியுள்ளவர்களாக இருப்பீர்கள் லூக்காக7:36-50)

"சோதனைக்குட்படாதபடி காத்து கொள்ளும்"- ஆவிக்குரிய ஆயுதங்களை எடுத்துக் கொள்ளுங்கள் (தேவனிடம் பாதுகாப்பிற்காக ஜெபியுங்கள்) **(பிலி 4:6-7, 1 பேதுரு 5:7)**

கே: நாம் இடைவிடாமல் ஜெபம் பண்ணும் போது நம்முடைய செயல்களும் அனுதின வேலைகளும் எப்படி மாறுகின்றது?

**செயல்முறை** இயேசு தன் சீஷர்களுக்கு கொடுத்த மாதிரி ஜெபத்தின்படி ஜெபப் பட்டியலை தயார் செய்யுங்கள். தடையில்லா நேரத்தையும் உங்களுக்கு சிறப்பான / உற்சாகமூட்டும் இடத்தையும் ஜெபம் செய்வதற்காக தேர்வு செய்யுங்கள். மற்றவர்களுடன் சேர்ந்து ஜெபிக்க நேரத்தை பயன்படுத்துங்கள் (லூக்கா 11 / ஜெபப் பட்டியலை உபயோகப்படுத்துங்கள்).

நாள் 3

ஜெபம் செய்வதற்க்கு சிறந்த வேலை காலையா அல்லது மாலையா? ***சங்கீதம் 5:3***
காலை நேரத்தில் தேவன் உங்களுடைய சத்தத்தை கேட்கக்கூடுமா?
தேவனுடைய சத்தத்தை ஒரு நாள் பொழுதில் எப்பொழுதாவது நீங்கள் கேட்க எதிர்பார்க்கிறீர்களா?

நாம் ஏன் தேவனை துதிக்கவேண்டும்? ***சங்கீதம் 92:1-3***
தேவனை துதிப்பதற்க்கு பாடல் பாடுவது ஏன் சிறந்த வழியாக இருக்கிறது?
தேவனை துதிப்பதற்க்கு நீங்கள் தானாகவே பாடல் பாடுவதை விரும்புவீர்களா? ஏன்?

தேவனைத்தவிர நீங்கள் என்நேரமும் பேசக்கூடிய நபர் யாரேனும் உண்டா? ***சங்கீதம் 88:1***
நாம் துயரத்தில் இருக்கும்போது ஏன் தேவனிடத்தில் சென்று மன்றாடுகிறோம்?
நீங்கள் தேவனிடம் மன்றாடும்போது அவர் ஏன் உங்களுக்கு செவிகொடுக்கிறார்?

உங்களை யாராவது ஜெபம் செய்வதிலிருந்து தடுத்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?
***தானியேல் 6:10***
ஒரு நாளில் மூன்று முறை தேவனிடத்தில் ஜெபிக்கும் பழக்கத்தை தானியேல் கொண்டிருந்தாரா? ஏன்?
தானியேல் தனக்கிருந்த சூழ்நிலையைக்குறித்து முறுமுறுக்காமல் தேவனுக்கு நன்றி செலுத்தினார். ஏன்?

நீங்கள் ஜெபம் செய்வதற்க்கு உங்களுடைய வேதத்தை பயன்படுத்துவீர்களா?
***சங்கீதம் 119:55,62***
வேதத்திலுள்ள பிரமாணங்களை நினைவுகூறுவது என்பது கடினமானதா? ஏன்?
உங்களை வழிநடத்தக்கூடிய வசனத்திற்க்காக நீங்கள் தேவனுக்கு நன்றி செலுத்துகிறீர்களா?

நீங்கள் முழு இரவும் ஜெபம் செய்திருக்கிறீர்களா? எப்பொழுது? ***லூக்கா 6:12***
இயேசு எதற்க்காக முழு இரவும் ஜெபம் செய்யவேண்டியதாயிருந்தது? இதை நீங்கள் நம்புகிறீர்களா?
இயேசு தேவனாயிருக்கிறார். அவர் ஏன் தேவனிடத்தில் ஜெபம் செய்யவேண்டியிருந்தது?

எந்த காரியங்களை நீங்கள் தொடர்ச்சியாக செய்துகொண்டிருப்பீர்கள்? உதாரணத்திற்க்கு: மூச்சுவிடுதல் ***1 தெசலோ 5:17***
தொடர்ச்சியாக ஜெபம் செய்வது என்பது சாத்தியமானதா?
நீங்கள் தொடர்ச்சியாக ஜெபம் செய்வதற்க்கான முயற்சியெடுப்பதற்க்கு விரும்புகிறீர்களா?

<u>நாள் 4</u>
நீங்கள் ஜெபிக்கும்போது தலை குனிந்து ஜெபிப்பீர்களா? ஏன்? ***ஆதி 24:52***
ஆபிரகாமின் ஊழியக்காரன் ஏன் தரைமட்டும் குனிந்து தேவனை பணிந்துகொண்டான்?
நீங்கள் தேவனை முகமுகமாய் பார்த்தால் என்ன செய்வீர்கள்?

ஆராதனை என்பதன் அர்த்தம் என்ன? ***யாத் 34:8***
மோசே மேலே பார்ப்பதற்க்கு பதிலாக ஏன் குனிந்து பணிந்துகொண்டான்?
குனிந்து பணிதல் என்பதற்க்கு அர்த்தம் தாழ்மை என்பது. அது உண்மையா?

முழங்காற்படியிடுதல் என்பது ஒரு தண்டனையா? ***1 இராஜா 8:54***
சாலொமோன் ஒரு இராஜாவாயிருந்தார். அவர் ஏன் முழங்காற்படியிட்டார்?
நீங்கள் ஜெபிக்கும்போது முழங்காற்படியிட நீங்கள் விரும்புவீர்களா? ஏன்?

தேவன் முழங்காற்படியிடுவதை உங்களால் நினைத்துப்பார்க்கமுடிகிறதா? ***லூக்கா 22:41***
இயேசு எதற்க்காக முழங்காற்படியிட்டார்?
இயேசுவிற்க்கு முழங்காற்படியிட்டு ஜெபிக்கும் வழக்கம் இருந்ததா? ஏன்?

யாராவது உங்களை நோக்கி துப்பாக்கியை சுடுவதற்க்கு காண்பித்தால், நீங்கள் உங்களின் கைகளை உயர்த்துவீர்கள். ஏன்? ***1 தீமோ 2:8***
நம்முடைய கரங்களை உயர்த்துவது என்பது சரணடைதல் என்பதாகும். இதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா?
நாம் ஜெபிக்கும்போது கோபப்படக்கூடாது. அதை நீங்கள் நம்புகிறீர்களா?

நின்றவாறு ஜெபம் செய்வது என்பது சரியான முறையாயிருக்குமா? ***லூக்கா 18:13***
ஆயக்காரன் ஏன் தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல் இருந்தான்?
“தேவனே பாவியாகிய என் மேல் கிருபையாயிரும்” என்று அவன் ஏன் ஜெபம் செய்தான்?

ஜெபம் செய்யும்போது எந்த சில வார்த்தைகளை சில மக்கள் திரும்பத்திரும்ப உபயோகிப்பார்கள்? ***மத் 6:7-8***
வீண் வார்த்தைகள் என்பதன் அர்த்தம் என்ன?
யார் வீண் வார்த்தைகளை அலப்புவார்கள்? ஏன்?

<u>நாள் 5</u>
கடைசியாக எப்பொழுது ஒரு நண்பருடன் சேர்ந்து ஜெபித்தீர்கள்? ***மாற்கு 14:32***
சீஷர்களிடம் ஜெபிக்கும்படியாக இயேசு ஏன் கூறினார்?
நம்முடைய ஜெபத்திற்க்கு எது இடையூறாக இருக்கிறது?

எல்லோருக்கும் விரோதிகள் இருக்கிறார்களா? ஏன்? ***மத் 5:44***
நம்மை பகைப்பவர்களுக்காக நாம் ஏன் ஜெபம் செய்யவேண்டும்?
நாம் ஏன் துன்புறுத்துதலுக்கு ஆளாகிறோம்?

மாயக்காரர்கள் என்பவர்கள் யார்? ***மத் 6:5***
சிலர் தாங்கள் ஜெபிப்பது பிறருக்கு தெரியவேண்டுமென ஏன் விரும்புகிறார்கள்?
ஜெபமானது ஏன் பலனளிக்கப்படுகிறது?

தேவனுடன் ஒரு இரகசியமான உறவு வைத்துக்கொள்வது சரியானதா? ஏன்? ***மத் 6:6***
நீங்கள் இரகசியமாக ஜெபிக்கவேண்டுமென ஏன் தேவன் விரும்புகிறார்?
யாரும் அறிந்திராதபடியான ஒரு சிறந்த உறவுமுறையை நீங்கள் தேவனிடம் வைத்திருக்கிறீர்களா? ஏன்?

நீங்கள் ஜெபிக்கும்போது திரும்பத்திரும்ப பயன்படுத்தும் வார்த்தை எது? (உங்களுக்குத் தெரியவில்லையென்றால் உங்களுக்கு அருகிலிருக்கும் நபரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்) ***மத் 6:7***
மற்றவர்களுடைய ஜெபத்தைக்காட்டிலும் உங்களுடைய ஜெபம் நன்றாக இருக்காது என்று நீங்கள் நினைக்கிறீர்களா?
தேவனிடத்தில் நீங்கள் பேசுவதை அவர் நேசிக்கிறார் என்று உங்களுக்குத் தெரியுமா?
நீங்கள் எவ்வாறு பேசுகிறீர்கள் என்பது முக்கியமல்ல.

எப்படிப்பட்ட வீட்டில் வசிக்க நீங்கள் விரும்புவீர்கள்? ***மத் 6:8***
நீங்கள் ஒரு நல்லவீட்டில் வசிக்கவேண்டுமென தேவன் விரும்புகிறார் என்று நினைக்கிறீர்களா?
நீங்கள் கனவு காணும் வீட்டை தேவன் கொடுப்பார் என்ற விசுவாசம் உங்களுக்கு இருக்கிறதா? ஏன்?

எப்படி பேசவேண்டுமென உங்களுக்கு யார் கற்பித்தது? ***மத் 6:9***
எப்படி ஜெபம் செய்வது என்று உங்கள் அப்பா உங்களுக்கு போதித்தாரா? ஏன்?
மக்கள் ஏன் இந்த உலகத்திற்க்கு தக்கவாறு நடக்கிற ஜெபத்தை ஜெபிக்கிறார்கள்?

<u>நாள் 6</u>
நாம் சிறு பிள்ளைகளை ஏன் மரியாதையுடன் நடத்துவது கிடையாது? ***மத் 19:13***
இயேசு சிறு பிள்ளைகளை எவ்வாறு நடத்தினார்?
நம்முடைய பிள்ளைகளை நாம் இயேசுவிடம் கொண்டுசெல்கிறோமா?

ஜெபிப்பது என்பது கடினமான காரியமா? ***மத் 26:36***
இயேசு தேவனாயிருந்தபோதிலும் ஏன் ஜெபம் செய்தார்? எப்படி ஜெபித்தார்? ஏன்?

உங்கள் ஜெபவேளையில் உங்களுடைய மிகவும் தாழ்த்தின நிலையை காண்பிப்பதற்க்கு நீங்கள் முயற்சி செய்ததுண்டா? ***மத் 26:39***
இயேசு எவ்வாறு தரையிலே விழுந்தாரோ அதேபோல் செய்யவும்.
சிலுவைக்கு செல்வதற்க்கு இயேசு தயாராக இருந்தாரா? ஏன்?

உங்களுக்கு தீவிரமாக உதவி தேவை எனும் வேளையில் யாருமே உங்களுக்கு உதவி செய்யவிரும்பவில்லை. நீங்கள் எவ்வாறு உணருவீர்கள்? ***மத் 26:40***
“நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடேகூட விழித்திருக்கக்கூடாதா” என்று இயேசு கூறும்போது அவர் எவ்வாறு உணர்ந்திருப்பார்?
இயேசு எதற்க்காக தனிப்பட்டமுறையில் பேதுருவை நோக்கி இதை கேட்டார்?

நம்மை யார் தூண்டுவது? ஏன்? நாம் விழவேண்டுமென அவன் ஏன் எதிர்பார்க்கிறான்? *மத் 26:41*
எந்த இரண்டு வழிகள் நாம் விழுவதிலிருந்து நம்மைத் தடுக்கும்?
நம்முடைய சரீரம் ஏன் பலவீனமாயிருக்கிறது? ஜெபம் செய்வது என்பது எப்படி நம்மை திடப்படுத்தும்?

கடந்த காலத்தில் நீங்கள் சந்தித்த மிகவும் கடினமான நேரம் எது? *மத் 26:42*
ஒரு நாளில் நீங்கள் அதிகப்படியாக எத்தனை தரம் ஜெபித்திருக்கிறீர்கள்?
நீங்கள் உங்கள் வலியை எடுத்துப்போடவேண்டுமென தேவனிடத்தில் ஜெபித்தபோது அவர் உங்களுக்கு செவிகொடுத்திருக்கிறாரா? ஏன்?

நீங்கள் ஜெபிக்கும்போது உறங்கினதுண்டா? *மத் 26:43-44*
இயேசு எதற்க்காக திரும்பவும் வந்து சீஷர்களை சந்தித்தார்?
இயேசு எதற்க்காக அதே காரியத்தை (ஜெபம்) மீண்டும் மீண்டும் கூறினார்?

<u>நாள் 7</u>
நீங்கள் தனிமையாய் இருக்கும் வேளையில் என்ன செய்வீர்கள்? *மாற்கு 6:46*
இயேசு எதற்க்காக மலைமேல் ஏறிச்சென்று ஜெபித்தார்?
அவர் ஏன் தனிமையாய் சென்றார்?

சில பழக்கங்கள் ஏன் மாறுவதற்க்கு கடினமாயிருக்கிறது? *மாற்கு 9:29*
சில தவறான பழக்கங்கள் உங்களை ஆட்கொண்டிருக்கின்றதா?
அவற்றை ஜெபத்தினால் <u>மட்டுமே</u> மேற்க்கொள்ளமுடியும் என்று உங்களுக்குத் தெரியுமா?

உங்களுடைய வீடு ஜெபம் நிறைந்த வீடாயிருக்கிறதா? *மாற்கு 11:17*
இயேசு தன்னுடைய வீடு ஜெபம் நிறைந்த வீடாயிருக்கவேண்டுமென விரும்புகிறார்.
உங்களுடைய வீடு ஜெபம் நிறைந்த வீடாயிருக்கவில்லையென்றால் அது எப்படிப்பட்ட வீடாயிருக்கிறது?

உங்களுடைய பெற்றோரிடத்தில் நீங்கள் எதைக் கேட்கிறீர்களோ அதை நீங்கள் பெற்றுக்கொள்கிறீர்களா? ஏன்? *மாற்கு 11:24*
இந்த வசனத்தின்படி, தேவனிடத்தில் நீங்கள் எதைக் கேட்கிறீர்களோ அதை நீங்கள் பெற்றுக்கொள்வீர்களா?
உங்களுடைய ஜெபத்தில் நீங்கள் கேட்டுக்கொள்வதை பெற்றுக்கொள்வதற்க்கு என்ன நிபந்தனை கூறப்பட்டிருக்கிறது?

பிறரை மன்னிப்பது என்பது மிகவும் கடினமானதா? ஏன்? *மாற்கு 11:25*
பிறரை மன்னிக்கமுடியாத செயல் என்பது பாவமாகவும் மற்றும் தேவனால் மன்னிக்கக்கூடாததாகவும் இருக்கிறது? இதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா?
மன்னிக்கப்பட்ட மக்கள் மட்டுமே பிறரை மன்னிக்க முடியும். கலந்துரையாடவும்.

ஒரே நேரத்தில் நீங்கள் நல்லவராகவும் தீயவராகவும் இருக்கக்கூடுமோ? *மாற்கு 12:40*
யாருடைய ஜெபத்தினால் நீங்கள் ஈர்க்கப்பட்டிருக்கிறீர்கள்? உங்களை எது ஈர்க்கச் செய்கிறது?
தேவன் அந்த ஜெபத்தினால் ஈர்க்கப்பட்டாரா? ஏன்?

நீங்கள் எப்படி மரிக்க விரும்புகிறீர்கள்? *மாற்கு 13:18*
உங்களுடைய மரணத்தை உங்களால் கட்டுப்படுத்த முடியுமா?
நாம் எவ்வாறு மரிக்கப்போகிறோம் என்பதைக்குறித்து ஜெபிக்கவேண்டுமென ஏன் தேவன் கூறுகிறார்?

<u>நாள் 8</u>
நீங்கள் ஜெபிக்கும்போது அதிகம் எந்த நிலையில் இருப்பதை விரும்புவீர்கள்: உட்கார்ந்து, நடந்து, நின்று வேறு சில. . . ? *மாற்கு 14:32*
அவர்களை ஜெபம் செய்யவேண்டாம் சற்று உட்கார்ந்திருங்கள் என்று இயேசு ஏன் கூறினார்?
இயேசு ஜெபிக்கும்போது எந்த நிலையில் இருப்பதை தேர்ந்தெடுத்தார்?

நீங்கள் எப்பொழுது அதிகம் ஜெபிப்பீர்கள். கஷ்டமான சூழ்நிலையிலா அல்லது மகிழ்ச்சியான சூழ்நிலையிலா? *மாற்கு 14:35*
இயேசு ஏன் தரையிலே விழுந்தார்?
இயேசு சிலுவைக்கு செல்வதை ஏன் விரும்பவில்லை. அது உண்மையா?

செயலற்ற மனது என்பது பிசாசின் பட்டறையாகும். இதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா? *மாற்கு 14:38*
ஜெபமானது நம்முடைய மனதை ஓய்வின்றி வைத்திருக்கும். இதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா?
இன்று நீங்கள் எதற்க்கு உணவளித்தீர்கள்? சரீரத்திற்க்கா அல்லது ஆவிக்கா ?

நீங்கள் ஒரு விபத்துக்குள்ளாகி உங்களுக்கு யாரும் உதவவில்லையெனில் நீங்கள் எவ்வாறு உணருவீர்கள்? *மாற்கு 14:39-40*
சீஷர்கள் தனக்கு ஆதரவான ஒரு துணையாக இல்லையென்பதைக் குறித்து இயேசு எவ்வாறு உணர்ந்தார்?
சீஷர்களிடம் மூன்று முறை வேண்டிக்கேட்டுக்கொண்ட நிலையிலும் இயேசு அவர்களிடம் கோபம் கொண்டாரா?

ஒருபொழுதும் செய்யாமலிருப்பதைக்காட்டிலும் காலதாமதமாக செய்வதே மேல். இதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா? *லூக்கா 1:13*
பல ஆண்டுகள் ஜெபம் செய்தபிறகு தன்னுடைய முதிர்ந்த வயதில் சகரியாவிற்க்கு ஒரு மகன் பிறக்கிறான். தேவன் நல்லவராயிருக்கிறாரா?
நம்முடைய ஜெபத்திற்க்கு நாம் விரும்புகிறபடி பதிலளிப்பவராக தேவன் இருக்கிறாரா. ஏன்?

விதவைகள் என்பவர்கள் யார்? இந்த உலகம் அவர்களை ஏன் தவறாக நடத்துகின்றது? *லூக்கா 2:36-37*
அன்னாள் எவ்வளவு காலம் தேவாலயத்தில் வசித்துக்கொண்டிருந்தார்?
அன்னாள் தேவாலயத்தில் இருக்கும் வேளையில் என்ன செய்துகொண்டிருந்தார்?

உங்களுடைய அப்பா உங்களை எவ்வளவு அன்பு செய்திருக்கிறார்/செய்கிறார்? *லூக்கா 3:21-22*
ஞானஸ்நானம் பெற்றபோதா அல்லது ஜெபம் செய்தபோதா எப்பொழுது தேவன் இயேசுவின்மேல் பிரியமாயிருந்தார்?
ஜெபம் என்பது தேவனிடத்தில் பேசுவதாகும். அது ஒரு மகன்/மகள் பேசுவதைப்போன்று தென்படுகிறதா அல்லது மிகவும் மதவாதம் நிறைந்ததாயிருக்கிறதா?

<u>நாள் 9</u>
சாப்பிடுவதைப்போன்று நீங்கள் அடிக்கடி செய்யும் வேறு சில செயல்கள் எவை? *லூக் 5:16*
இயேசு எதற்க்காக அடிக்கடி ஜெபம் செய்தார்?
நீங்கள் அடிக்கடி ஜெபம் செய்வீர்களா? ஏன்?

ஜெபமும் மகிழ்ச்சியும் ஒருங்கிணைந்து செல்லுமா அல்லது ஜெபமும் வேதனையும் செல்லுமா? *லூக்கா 5:33*
மதவாதமாயிருப்பவர்கள் மகிழ்ச்சியாயிருப்பதில்லை. ஏன்?
மணவாளனுடன் இருப்பதுதான் ஜெபம் என்று எதற்க்காக இயேசு கூறினார்?

நீங்கள் ஒரு இரவு முழுவதும் யாருடனாவது பேசி நேரம் செலவழித்ததுண்டா? யாருடன்? *லூக்கா 6:12*
நீங்கள் யாரையாவது நேசிக்கும்போது அவர்களுடன் அதிக நேரம் பேசி செலவிடுவீர்கள்.
இயேசு எதற்க்காக முழு இரவு ஜெபத்தில் மகிழ்ச்சியடைந்தார்?

உங்களுடைய விரோதிகளை தேவன் எவ்விதமாய் நடத்தவேண்டும் என நீங்கள் விரும்புகிறீர்கள்? நிச்சயமாகவா? *லூக்கா 6:28*
நீங்கள் தினந்தோறும் உங்களுடைய பெற்றோருக்காக ஜெபிக்கின்றீர்களா? ஏன்?
உங்களை மிகவும் கடுமையான முறையில் சபித்தது யார்? அதைக்குறித்து எவ்வாறு உணருகிறீர்கள்?

உங்கள் பள்ளி/கல்லூரி/வேலை பார்க்கும் இடத்தில் இருக்கும் நண்பர்கள் உங்களைக்குறித்து எவ்வாறு நினைக்கிறார்கள்? *லூக்கா 9:18*
மக்களுடைய கருத்து என்னவாயிருக்கிறதென்று தெரிந்துகொள்ள ஏன் இயேசு விரும்பினார்?
நீங்கள் ஒரு ஜெபிக்கக்கூடிய நபர் என்று மக்கள் அறிந்திருக்கிறார்களா?

உங்களுடைய வீட்டில் ஜெபம்செய்வதை யார் மிகவும் மகிழ்ச்சியாக செய்வார்கள்? *லூக்கா 9:28*
ஜெபம்செய்வதற்க்காக இயேசு தன்னுடைய சீஷர்களை எதற்க்காக ஒரு மலையின்மேல் அழைத்துச் சென்றார்?
நீங்கள் தனிப்பட்ட முறையில் மிகவும் அதிக அளவு ஜெபம் செய்தது எப்பொழுது?

நீங்கள் ஒரு திரைப்படத்திற்க்கு செல்வதில் ஏன் மகிழ்ச்சியடைகிறீர்கள்? *லூக்கா 9:29*
சீஷர்கள், இயேசு மறுரூபமடைவதை தங்கள் கண்முன்பாக கண்டவுடன் அவர்கள் எவ்வாறு உணர்ந்தார்கள்?
ஜெபம் என்பது நாம் மகிழ்ந்து பார்த்து மற்றும் தொடர்புபடுத்தி உரையாடக்கூடிய தேவனுடைய திரைப்படம். கலந்துரையாடவும்.

<u>நாள் 10</u>
ஏன் எல்லோரும் வெவ்வேறு விதமாக ஜெபிக்கிறார்கள்? *லூக்கா 11:1*
இயேசு எதற்க்காக ஜெபம் செய்வது எப்படி என்று போதித்தார்?
ஜெபம் செய்வது எப்படி என்று உங்களுக்கு போதித்தது யார்? அப்படி போதிக்கவில்லையெனின் யாரிடமாவது கேளுங்கள்.

உங்களுடைய தந்தையிடம் நெருக்கமாக இருப்பதாக உணருகிறீர்களா? ஏன்?*லூக்கா 11:2*
நாம் தேவனை பிதாவென்று அழைக்கவேண்டுமென எதற்க்காக இயேசு கூறுகிறார்?
தேவன் நம்முடைய பிதாவாயிருந்தால் இயேசு என்பவர் யார்?

இந்த உலகத்திலிருக்கும் அரசாங்கம் ஊழல் நிறைந்ததாயிருக்கிறதா? ஏன்?*லூக்கா 11:2*
நமக்கு ஒரு புதிய அரசாங்கம் தேவையா (இராஜ்ஜியம்)?
தேவனுடைய இராஜ்ஜியம் வரவேண்டுமென எதற்க்காக நாம் தேவனை கேட்கவேண்டும்?

அரசியல்வாதிகளைக்குறித்து நீங்கள் மகிழ்ச்சியடைகிறீர்களா? ஏன்? *லூக்கா 11:2*
இந்த உலகம் அரசியல்வாதிகளின் சித்தத்தையா அல்லது தேவனுடைய சித்தத்தையா எதை பின்பற்றவேண்டும்?
எந்த காரியம் தனித்துவமாக தேவனுடைய இராஜ்ஜியத்தில் தென்படுகிறது?

நீங்கள் உணவு சாப்பிடும் முன் ஜெபிப்பீர்களா அல்லது உணவு சாப்பிட்ட பின் ஜெபிப்பீர்களா? ஏன்? *லூக்கா 11:3*
நம்மிடம் ஏற்கனவே உணவு இருக்கும் பட்சத்தில் நாம் எதற்க்காக தேவனிடம் அன்றாட உணவிற்க்காக வேண்டுதல் செய்யவேண்டும்?
நம்மிடம் உணவு இருந்ததெனில் நாம் தேவனுக்கு நன்றி செலுத்துவோம். நம்மிடம் உணவு இல்லாத நிலையில் தேவனிடம் கேட்போம். கலந்துரையாடவும்.

மன்னிப்பது என்பது சுலபமான ஒன்றா? ஏன்? *லூக்கா 11:4*
ஏன் மன்னிப்பு என்பது நம்முடைய ஜெபத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டும்?
நம்முடைய பாவத்தை மன்னிப்பதற்க்கு தேவன் என்ன நிபந்தனை வைத்திருக்கிறார்?

நம்மை யார் தூண்டுவது? யார் மூலம் மற்றும் எதன்மூலம் நம்மை தூண்டுதலுக்குட்படுத்துவான்? *லூக்கா 11:4*
ஆசைவிருப்பமா அல்லது சோதனைத்தூண்டுதலா எது முதலில் வரும்?
ஆசைவிருப்பம் இல்லாத இடத்தில் அங்கே சோதனைத்தூண்டுதல் இருக்காது. கலந்துரையாடவும்.

<u>நாள் 11</u>
உங்களுடைய தகப்பனார் அதிகமாக உங்கல் தேவைகளுக்கு கொடுப்பவராக இருக்கிறாரா அல்லது கொடுக்கமாட்டாரா? *லூக்கா 11:9-10*
நமக்கு என்ன தேவை என்று தேவன் தெரிந்திருக்கும் பட்சத்தில் நாம் ஏன் அவரை கேட்கவேண்டும்?
கேட்பது என்பது பெருமையானதா அல்லது தாழ்மையானதா?

உங்களது வீட்டில் நீங்கள் உங்களுடைய எதை உங்களுக்காக தேடுவீர்கள்?*லூக்கா 1:9-10*
தேவனை தேடுவது என்பது கடினமானதா அல்லது சுலபமானதா?
தேவன் எல்லா இடத்திலும் இருக்கும் பட்சத்தில் நாம் ஏன் தேவனை தேடவேண்டும்?

நீங்கள் நீண்ட நேரம் கதவை தட்டிய பின்பு அந்த வீட்டில் யாரும் இல்லையென உங்களுக்கு தெரியவந்த நிலை இருக்கிறதா? *லூக்கா 11:9-10*
நீங்கள் தேவனுடைய கதவைத் தட்டுகிறீர்களா அல்லது தேவன் உங்களது கதவைத் தட்டுகிறாரா?
உங்களுக்கு ஏதாவது தேவை என்ற நிலையில் நீங்கள் தேவனுடைய கதவைத் தட்டுகிறீர்களா அல்லது வேறு யாராவது ஒருவருடைய கதவைத் தட்டுகிறீர்களா?

உங்களுக்கு உங்களது தாயார் நல்ல உணவை சமைப்பார்களா அல்லது மோசமான உணவை சமைப்பார்களா? ஏன்? *லூக்கா 11:11-13*
வசனம் 13ஐ பொறுத்தவரை நாம் எப்படிப்பட்ட நபர்களாக இருக்கிறோம்? இதைக்குறித்து எவ்வாறு உணருகிறீர்கள்?
தேவன் உங்களுக்கு தரவிரும்பும் மிகச்சிறந்த பரிசு என்னவாயிருக்கிறது (வச 13)?

நீங்கள் மிகநீண்ட விடாமுயற்சிக்குப்பின் உங்களுடைய தகப்பனாரிடமிருந்து பெற்ற காரியம் எது? *லூக்கா 18:1-3*
அன்பான தேவனை ஒரு கொடூரகுணம்கொண்ட நியாயாதிபதியுடன் இயேசுவானவர் ஏன் ஒப்பிடுகிறார்?
ஏன் விதவையானவள் நமக்கு ஒப்பாக கூறப்பட்டிருக்கிறாள்?

நீங்கள் தேர்வில் ஒரு பாடத்தில் தோல்வியடைந்தபின் அதில் தேர்ச்சி மதிப்பெண்வேண்டி உங்களுடைய ஆசிரியரை (கெஞ்சி) வேண்டியிருக்கிறீர்களா? *லூக்கா 18:4-5*
இந்த விதவையானவள் எத்தனைமுறை அந்த நியாயாதிபதியினிடத்தில் சென்றாள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?
அந்த நியாயாதிபதி இந்த விதவைக்கு பயந்தாரா அல்லது இந்த விதவை அந்த நியாயாதிபதிக்கு பயந்தாரா?

நீங்கள் கேட்கிற அனைத்தையும் தேவன் உங்களுக்கு கொடுப்பார் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? ஏன்? *லூக்கா 18:6-8*
நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர் என்று நீங்கள் நினைக்கிறீர்களா (அவருடைய பிள்ளைகள்)?
கடைசியாக எப்பொழுது உங்களுடைய ஜெபத்தில் நீங்கள் அழுதீர்கள்? ஏன்?

<u>நாள் 12</u>
உங்களுடைய வடு ஜெப வீடாகயிருக்கிறதா? *லூக்கா 19:45-46*
இயேசு எதற்க்காக தன்னுடைய வீடு ஜெப வீடாயிருக்கவேண்டுமென விரும்புகிறார்?
அது ஒரு ஜெப வீடாயிருக்கவில்லையெனில் அப்பொழுது அது கள்ளர் குகையாயிருக்கிறது. விவரிக்கவும்.

எப்படிப்பட்ட நபர் விதவையின் வீட்டை அழித்துபோடுவான்? *லூக்கா 20:47*
பொல்லாத மக்கள் நீண்ட ஜெபத்தை ஜெபிக்கமுடியுமா?
பொதுஇடத்திலா அல்லது தனிப்பட்ட இடத்திலா எந்த இடத்தில் நீண்ட ஜெபம் செய்வதைக்குறித்து இயேசு குறிப்பிடுகிறார்?

பரிசுத்த ஆவியானவர் நமக்காக ஜெபிக்கின்றார் என்று உங்களுக்கு தெரியுமா? ஏன்? *லூக்கா 22:32*
இயேசு எதற்க்காக பேதுருவிற்க்காக ஜெபித்தார்?
இயேசு எப்படிப்பட்ட ஜெபத்தை பேதுருவிற்க்காக ஜெபித்தார்?

உங்களை யார் தூண்டுதல் செய்வது? ஏன்? *லூக்கா 22:40*
நீங்கள் தூண்டுதலுக்குட்படும்போது ஜெபமானது எவ்வாறு உதவுகிறது?
நீங்கள் விழும்பொழுது என்ன நடக்கிறது? அது ஒரு விபத்தா அல்லது வேண்டுமென்றே செய்த செயலா?

ஜெபநேரத்தை தவிர நீங்கள்அதிகநேரம் முழங்கால்படியிட்டது எப்பொழுது?*லூக்கா 22:41*
இயேசு தேவனாயிருக்கும்பட்சத்தில் அவர் ஏன் முழங்கால்படியிட்டு ஜெபித்தார்?
முழங்கால்படியிடுவது என்பது சரணடையும் செயலாகும். நீங்கள் ஜெபித்தபிறகு உங்களுக்கு சமாதானம் இருக்கிறதா?

நீங்கள் இரத்த தானம் செய்திருக்கிறீர்களா? ஏன்? *லூக்கா 22:44*
எப்பொழுது வியர்வை ஏற்படும்? இயேசு எதற்க்காக வியர்வை சிந்தினார்?
இயேசு ஊக்கமாக ஜெபித்தார். இன்று நாம் யாராவது ஒருவருக்காக ஊக்கத்துடன் ஜெபிப்போமா?

மனிதர்களாக ஒருவாய்ப்பு கிடைக்கும்பட்சத்தில் நீங்கள் ஜெபிப்பீர்களா அல்லது உறங்குவீர்களா? *லூக்கா 22:45-46*
அவர்கள் துக்கம் நிறைந்தவர்களாயிருக்கிறார்கள் என்பதற்க்காக அவர்கள் ஜெபம் செய்வதை தவிர்க்கும்படி இயேசு கூறினாரா?
ஜெபம் செய்யாமலிருப்பதற்க்கு எந்த காரணமும் இருக்கமுடியாது. கலந்துரையாடவும்.

<u>நாள் 13</u>
வேதத்திலிருக்கும் மக்கள் ஜெபம் செய்யும்போது தங்கள் கண்களை மூடிக்கொண்டிருந்தார்களா? *யோவான் 17:1*
இயேசு எதற்க்காக ஜெபம் செய்யும்போது தம்முடைய கண்களை வானத்துக்கு ஏறெடுத்தார்?
இயேசுவின் ஜெபம் என்னவாயிருக்கிறது? இயேசு என்ன ஜெபித்தாரோ அதேபோல் நம்மால் ஜெபிக்க முடியுமா?

நாம் கிறிஸ்தவரல்லாதவருக்காகவும் ஜெபிக்கலாமா? ஏன்? *யோவான் 17:9*
இயேசு எதற்க்காக தனிப்பட்டவிதத்தில் சீஷர்களுக்காக ஜெபித்தார்?
நாம் இயேசுவிற்க்குறியவர்களாயிருந்தோமெனில் நாம் தேவனுக்குறியவர்களாயிருக்கிறோம். விவரிக்கவும்.

நாம் சீஷர்களாயிருந்தபோதிலும் இந்த உலகத்திலிருப்பவர்கள் போன்று எதற்க்காக நாம் துன்பப்படுகிறோம்? கலந்துரையாடவும். *யோவான் 17:15*
நாம் இன்னும் இந்த உலகத்திலிருப்பவர்கள் ஆனால் இந்த உலகத்திற்க்குறியவர்களல்ல.
நாம் தீமையிலிருந்து காக்கப்படவேண்டுமென இயேசு எதற்க்காக ஜெபித்தார்?

இந்த ஞாயிற்றுக்கிழமை யாரை நீங்கள் சபைக்கு அழைத்துவர திட்டமிட்டிருக்கிறீர்கள்? *யோவான் 17:20*
இயேசு எதற்க்காக எதிர்காலத்தில் வரவிருக்கும் சீஷர்களுக்காக ஜெபித்தார்?
நம்முடைய செய்தியின் மூலமாக மாத்திரமே எதிர்கால சீஷர்கள் இயேசுவை அறிந்துகொள்வார்கள். கலந்துரையாடவும்.

உங்களது குடும்பத்துலுள்ள எத்தனை நபர்கள் சீஷர்களாயிருக்கிறார்கள்?*அப்போ 1:14*
இயேசு உயிர்த்தெழுந்தபின்பு அவருடைய தாயாரும், சகோதரர்களும் சீஷர்களுடன் சேர்ந்துகொண்டார்கள். ஏன்?
உங்களுடைய குடும்பநேர ஜெபத்தில் உங்களின் உறவினர்களில் சிலர் உங்களுடன் கலந்துகொண்டால் நீங்கள் எவ்வாறு உணருவீர்கள்?

நீங்கள் சமீபத்தில் எடுத்த ஒரு முக்கியமான தீர்மானம் எது? நீங்கள் ஜெபித்தீர்களா? *அப்போ 1:24*
ஒருவரை தேர்ந்தெடுப்பதற்க்கு முன் சீஷர்கள் எதற்க்காக ஜெபித்தார்கள்?
நம்முடைய இருதயத்தின் விருப்பங்களை இயேசு அறிந்திருக்கிறார். அப்படியிருந்தும் நாம் ஜெபிக்கவேண்டுமா?

உங்களுக்கு பிடித்த விளையாட்டு எது? நீங்கள் விளையாடுவதிலா அல்லது அதை பார்ப்பதிலா எதில் அதிக ஈடுபாடு காண்பிப்பீர்கள்? *அப்போ 2:42*
நீங்கள் எந்த அளவு அடிக்கடி ஜெபிப்பீர்கள்?
நீங்கள் அதிக ஜெபம் செய்வதன் மூலம் அதிக முதிர்ச்சியடைவீர்கள்.

<u>நாள் 14</u>
நீங்கள் ஜெபம்செய்வதற்க்கு ஒரு கட்டிடத்திற்க்கு செல்வீர்களா?ஏன்? *அப்போ 3:1*
எதற்க்காக மதியம் 3 மணிக்கு பேதுருவும், யோவானும் தேவாலயத்திற்க்கு சென்றனர்?
தேவனை தேடுகின்ற நபர்கள் ஆத்மீகமான (மதம் சார்ந்த) இடங்களுக்கு செல்வார்களா?

நீங்கள் துன்புறுத்தப்பட்டிருக்கிறீர்களா? ஏன்? *அப்போ 4:23-24*
சேர்ந்து ஜெபம் செய்வது என்பது எதனால் மிக முக்கியமானது?
அவர்கள் தேவனிடத்தில் எதைவேண்டி ஜெபித்தார்கள்?

நீங்கள் எப்பொழுது ஒருவருக்கு வேதாகமத்தை போதிப்பீர்கள்? *அப்போ 4:31*
அவர்கள் கூடியிருந்த அந்த இடம் ஏன் அசைந்தது?
நீங்கள் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டிருக்கும்போது என்ன நேரிடும்?

நீங்கள் முழு நேர ஊழியத்தில் இருப்பதற்க்கு விரும்புகிறீர்களா? *அப்போ 6:3-4*
உங்கள் சபையில் இருக்கும் முழு நேர ஊழியக்காரர் செய்யக்கூடிய பொறுப்புகள் என்ன?
அப்போஸ்தலர்கள் தங்களது கவனத்தை எதற்க்கு கொடுத்தார்கள்? ஏன்?

உங்களுடைய சபையிலிருக்கும் விதவைகளை யார் பார்த்துக்கொள்வது? *அப்போ 6:5-6*
சபையிலிருக்கும் விதவைகளை பார்த்துக்கொள்வதற்க்கு நீங்கள் தானாக முன்வருவீர்களா?
விதவைகளை பார்த்துக்கொள்வதற்க்கு நீங்கள் எப்படிப்பட்ட நபராக இருக்கவேண்டும்?

உங்களை யாராவது கல்லெறிந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்? *அப்போ 7:59*
ஸ்தேவான் எதற்க்காக ஜெபித்துக்கொண்டிருந்தார்?
ஸ்தேவான் எதற்க்காக கல்லெறியப்பட்டார்?

நீங்கள் பணத்திற்க்காக ஜெபிப்பீர்களா அல்லது ஒருவரிடத்தில் பணத்தைக்கொடுத்து உங்களுக்காக ஜெபிக்க சொல்வீர்களா? *அப்போ 8:20-23*
இங்கு எந்த துர்க்குணத்திலிருந்து மனந்திரும்பி ஜெபிக்கவேண்டுமென பேதுரு கூறுகிறார்?
எது சிறந்தது: பணமா அல்லது ஜெபமா? பட்டிமன்றம் நடத்துங்கள்.

<u>நாள் 15</u>
தேவன் கிறிஸ்தவரல்லாதவர்களின் ஜெபங்களையும் கேட்பாரா? *அப்போ 9:11*
நீங்கள் வந்து உதவி செய்யவேண்டுமென யாராவது ஜெபிக்கின்றார்களா?
உங்கள் அண்டை வீட்டிலுள்ள சவுலினுடைய ஜெபத்திற்க்கு நீங்கள் பதிலாக இருக்கிறீர்களா?

நம்முடைய முழங்கால்களில் நாம் ஏன் ஜெபிக்கவேண்டும்? *அப்போ 9:40*
நீங்கள் முழங்காலிட்டு ஜெபிப்பீர்களா?
முழங்காலில் நீங்கள் ஜெபிக்கும்போது அது ஒருவரை உயிரோடே எழுப்புமா?

நீங்கள் தொடர்ந்து ஜெபிக்கிறவராயிருக்கிறீர்கள் என்று உங்களால் கூறமுடியுமா?*அப்போ 10:2*
நாம் தொடர்ந்து ஜெபிக்கும்போது ஏன் தேவன் பிரியப்படுகிறார்?
கொர்நேலியு தொடர்ந்து ஜெபித்ததினால் என்ன நேர்ந்தது?

நினைப்பூட்டுதலான செயல்கள் என்றால் என்ன? *அப்போ 10:4*
எந்தவிதமான நினைப்பூட்டும் காணிக்கையை கொர்நேலியு கொடுத்தார்?
சமீபத்தில் நீங்கள் செய்த காணிக்கை என்ன?

நீங்கள் ஜெபம் செய்ததில் மிகவும் தனிமையான இடம் எது? *அப்போ 10:9*
பேதுரு எதற்க்காக மேல் வீட்டில் ஏறி ஜெபிக்க சென்றார்?
ஜெபம் செய்வது உங்களுடைய முதிர்ச்சியை அடிக்கடி காண்பிக்கிறதா?

ஒரு நபர் ஒரே நேரத்தில் இரண்டு இடங்களில் இருக்க முடியுமா? ஏன்? *அப்போ 10:30*
பேதுருவிற்க்கும் கொர்நேலியுவிற்க்கும் ஒரே நேரத்தில் தேவதூதர் தோன்றினர். எப்படி?
இருவரும் அந்த நேரத்தில் என்ன செய்துகொண்டிருந்தனர்?

தேவனுடைய வார்த்தையை பிரங்கித்த காரணத்திற்க்காக சபைத் தலைவரை சிறையில் அடைத்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்? *அப்போ 12:5*
சபையில் பேதுருவிற்க்காக ஊக்கமாக ஜெபித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் எதற்க்கென்று ஜெபித்துக்கொண்டிருந்தார்கள்?
நீங்கள் ஒரு பிரச்சனையில் இருந்தால் உங்களுக்காக ஜெபம்செய்வபரின் பெயரை கூறவும்?

## நாள் 16
நீங்கள் கிறிஸ்துவைக்குறித்து பிரசங்க்கித்ததனால் சிறையில் தள்ளப்பட்டால் என்ன செய்வீர்கள்? *அப்போ 12:12*
பேதுரு சிறையில் அடைக்கப்பட்டிருந்த போதிலும் விசுவாசிகளிடத்தில் போக முடிவெடுத்தார். ஏன்?
ஜனங்கள் ஜெபம் செய்வதற்க்கு எங்கே கூடினார்கள்? ஏன் சபை கட்டிடத்தில் கூடவில்லை?

ஊழியக்குழுவில் செல்ல நீங்கள் விரும்புகிறீர்களா? *அப்போ 13:1-3*
பரிசுத்த ஆவியானவரே அவர்களை பிரித்தெடுப்பதற்க்காக ஏன் உபவாசித்து ஜெபம் செய்தார்கள்?
கடைசியாக எப்பொழுது உங்கள் குடும்பசபையிலிருந்து ஒரு ஊழியக்குழு சென்றதை நீங்கள் பார்த்தீர்கள்?

நம்முடைய சபையில் ஏன் மூப்பர்கள் தேவைப்படுகிறார்கள்? *அப்போ 14:23*
நம்முடைய சபையில் ஏன் மூப்பர்கள் இல்லை?
ஒரு மூப்பராயிருப்பதற்க்கு தேவையான தகுதிகள் என்ன?

நீங்கள் ஜெபம் செய்வதற்க்கான இடம் உங்களுக்கு இருக்கிறதா? அது எங்கே இருக்கிறது? *அப்போ 16:13*
பவுல் ஜெபம் செய்வதற்க்கான இடத்தை கண்டுபிடித்தாரா?
பெண்களிடம் பேசமுடியாது என்று பவுல் ஏதாகிலும் சாக்குபோக்கு கூறினாரா?

அசுத்த ஆவி பிடித்திருக்கும் யாரையாவது நீங்கள் கண்டதுண்டா? *அப்போ 16:16*
அசுத்த ஆவியினால் எதிர்காலத்தை கூறமுடியுமா?
அசுத்த ஆவிக்கு பவுலைக்குறித்து எப்படி தெரிந்திருந்தது?

நீங்கள் சிறைச்சாலையில் தள்ளப்பட்டால் என்ன செய்வீர்கள்? *அப்போ 16:25*
சிறைச்சாலையில் தள்ளப்பட்டிருக்கும் நிலையில் பவுலும் சீலாவும் என்ன செய்தார்கள்?
பிற சிறைச்சாலைக் கைதிகள் என்ன செய்துகொண்டிருந்தனர்? ஏன்?

கடைசியாக எப்பொழுது உங்களுக்கு கண்ணீர்மல்க வழியனுப்புதல் நடைபெற்றது? *அப்போ 20:36-38*
அவர்கள் எவ்வாறு பவுலைக் கட்டித்தழுவி முத்தஞ்செய்து கண்ணீர்விட்டு அழுதிருப்பார்கள் என்பதனை உங்களால் யோசித்துப்பார்க்க முடிகிறதா?
சபையிலிருக்கும் யாருடனாவது உங்களுக்கு ஒரு சிறந்த நல்ல உறவுமுறை இல்லாமலிருக்கிறதா?

## நாள் 17
உங்களுடைய குடும்ப சபைத்தலைவர் இனிமேல் உங்களுடைய தலைவராக இருக்கப்போவதில்லையெனில் நீங்கள் அழுவீர்களா? *அப்போ 21:5*
நீங்கள் உங்களுடைய குடும்ப சபை தலைவருக்காகவும் உங்களுடைய குடும்ப சபையிலிருக்கும் நபர்களுக்காகவும் ஜெபிக்கிறீர்களா?
உங்களுடைய அப்பா மற்றும் அம்மாவிற்க்காக எத்தனை முறை ஜெபம் செய்திருக்கீறீர்கள்? ஏன்?

உங்களுடைய கனவில் நீங்கள் தேவனை பார்த்ததுண்டா? ஏன்? *அப்போ 22:17*
தேவன் வேதத்தின் மூலம் இன்று உங்களிடம் என்ன பேசினார்?
தேவன் உங்களிடத்தில் பேசும்போது அதை கேட்க நீங்கள் தயாராக இருக்கிறீர்களா?

உயர் அதிகாரத்திலிருக்கும் எந்த நபரிடம் நீங்கள் இயேசுவைக்குறித்து பேசியிருக்கிறீர்கள்? *அப்போ 26:29*
உங்களுக்கு மேலாக இருக்கும் நபரிடத்தில் உங்களுக்கு பிரச்சனை ஏற்படும் சூழ்நிலையில் நீங்கள் ஜெபிப்பீர்களா?
பவுல் எதற்க்காக ஜெபித்தார்?

நீங்கள் ஒரு பிரச்சனையிலிருக்கும்போது இரட்சிக்கப்பட வேண்டுமென ஜெபிப்பீர்களா அல்லது சந்தோஷமாயிருக்க வேண்டுமென ஜெபிப்பீர்களா? *அப்போ 27:29*
தாங்கள் இரட்சிக்கப்பட வேண்டுமென ஜெபிப்பதற்க்குப்பதிலாக பகலின் வெளிச்சத்திற்க்காக அவர்கள் ஏன் ஜெபித்தார்கள்?
நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கும் நிலையில் மீண்டுமாக நீங்கள் இரட்சிக்கப்பட வேண்டியதில்லை. விவரிக்கவும்

நீங்கள் கடைசியாக எப்பொழுது ஒரு நோயாளியை தொட்டு ஜெபித்தீர்கள்? *அப்போ 28:8*
உங்கள் மூலம் தேவன் ஒருவரை குணமாக்க முடியும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?
உங்களுக்கு அக்கறை இருப்பதனால் நீங்கள் ஜெபிக்கிறீர்கள். இதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா?

நீங்கள் ஜெபிக்கும்போதெல்லாம் இடைவிடாமல் யாரை நினைவுகூறுவீர்கள்?*ரோமர் 1:9-10*
பவுல் ஜெபிக்கும்போதெல்லாம் ஏன் இடைவிடாமல் மக்களை நினைவு கூறுகிறார்?
நீங்கள் ஒருவரை அன்பு செய்யும்போது அவருக்காக இடைவிடாமல் ஜெபிப்பார்கள். கலந்துரையாடவும்.

எந்த இடத்திற்க்கு ஊழியக்குழுவை அனுப்பவேண்டுமென உங்கள் குடும்ப சபை ஜெபித்துக்கொண்டிருக்கிறது? நீங்கள் செய்கிறீர்களா? *ரோமர் 1:10*
தன்னை ரோமாபுரிக்கு அனுப்பவேண்டுமென ஏன் தேவனிடத்தில் பவுல் ஜெபித்தார்?
எந்த இடத்திற்க்கு தேவன் உங்களை அனுப்பவேண்டுமென நீங்கள் ஜெபிக்கீறீர்கள்?

**நாள் 18**

உங்களுக்காக யார் தொடர்ந்து ஜெபிக்கிறார்கள்? ஏன்? *ரோமர் 8:26*
நாம் பெலவீனமாயிருக்கும்போது என்ன நேரிடுகிறது?
உங்களுடைய அப்பா மற்றும் அம்மாவிற்க்காக எத்தனை முறை ஜெபம் செய்கீறீர்கள்? ஏன்?

உங்களுடைய குடும்பத்தைத் தவிர வேறு யாருக்கெல்லாம் நீங்கள் ஜெபிப்பீர்கள்? *ரோமர் 8:26*
நமக்கு எதற்க்காக ஜெபிக்கவேண்டுமென தெரியாமலிருந்தால் என்ன ஆகும்?
ஆவியின் ஜெபம் எவ்வளவு ஆழமானது?

எல்லா இந்தியர்களும் இரட்சிக்கப்படவேண்டுமென ஜெபிக்கிறீர்களா அல்லது அது உங்களுடைய விருப்பமாக இருக்கிறதா? *ரோமர் 10:1*
பவுலினுடைய விருப்பமும் விண்ணப்பமும் என்னவாயிருக்கிறது?
நம்முடைய நெருங்கிய உறவினர்களுக்காகவும் நண்பர்களுக்காகவும் நம்முடைய விருப்பத்தை ஜெபம் செய்து துவங்குவோம்.

உறுதியாய்த்தரித்திருத்தல் என்பதன் அர்த்தம் என்ன? *ரோமர் 12:12*
நாம் ஏன் ஜெபத்தில் உறுதியாய்த்தரித்திருக்க வேண்டும்?
உங்களுடைய குடும்ப நேர ஆராதனையை நீங்கள் உறுதியாய் செய்துவருவதற்க்காக நான் (ராஜ் மோகன் பால் மற்றும் ராணி பால்) உங்களை பாராட்டுகிறேன்.

நீங்கள் கடைசியாக எப்பொழுது உங்கள் வகுப்பு ஆசிரியர்/முதலாளிக்காக தனிப்பட்ட சிறப்பு ஜெபம் செய்தீர்கள்? *ரோமர் 15:30-32*
பவுல் தனக்காக ஜெபிக்கும்படி ஏன் சபையைக் கேட்டுக்கொண்டார்?
உங்களுடைய குடும்ப சபைத்தலைவருக்கு நேரிடும் போராட்டத்தில் நீங்கள் எவ்வாறு பங்குகொள்ளமுடியும்?

எப்படிப்பட்ட போராட்டத்தை தலைவர்கள் சந்திக்கிறார்கள்? *ரோமர் 15:31-32*
அவிசுவாசிகள் பவுலுக்கு என்ன செய்கிறார்கள்?
சீஷர்கள் தன்னை அங்கீகரிக்கவேண்டுமென ஏன் பவுல் கேட்கிறார்?

உங்களுடைய குடும்பசபை ஒற்றுமையுடன் இருக்கிறதா? ஏன்? *ரோமர் 15:31*
சபையில் நீங்கள் ஏற்றுக்கொள்ளாத நபர் யாராவது உண்டா?
சபையில் உங்களை ஏற்றுக்கொள்ளாத நபர் யாராவது உண்டா?

**நாள் 19**

உங்களுடைய வீட்டில் யார் அதிகம் ஜெபிப்பார்கள்? ஏன்? *1 கொரி 7:5*
நீங்கள் ஜெபத்தில் அர்ப்பணிப்புள்ளவராக (ஈடுபாடு) இருக்கிறீர்களா? ஏன்?
நீங்கள் ஜெபம் செய்வதை யார் தடுப்பது?

பெண்கள் தலையை முக்காடிடவேண்டுமென பழைய ஏற்பாடு நமக்கு போதிக்கின்றதா? *1 கொரி 11:4*
ஜெபிக்கும்போது தலையை முக்காடிடுவதைக் குறித்து பவுல் ஏன் கூறுகிறார்?
ஆண்கள் ஜெபிக்கும்போது தலையை முக்காடிடுவது தவறு என்று நீங்கள் நினைக்கிறீர்களா? ஏன்?

பெண்கள் மட்டும் முக்காடிடவேண்டும் ஏன் ஆண்கள் முக்காடிட தேவையில்லை? *1கொரி 11:5*
சாதாரணமாகவே எதற்க்காக பெண்கள் நீளமான முடியும் ஆண்கள் சிறிய அளவு முடியும் வைத்துக்கொள்கிறார்கள்?
யாருடைய ஜெபம் சிறந்ததாயிருக்கும் ஆண்களுடையதா அல்லது பெண்களுடையதா?

இயற்க்கையான பிரமாணம் மற்றும் ஆத்மீகமான பிரமாணம் என்றால் என்ன? *1 கொரி 11:13*
சபையின் பழக்கத்திற்க்கும் வேதத்தின் போதனைக்குமுள்ள வித்தியாசம் என்ன?
நீங்கள் எதை பின்பற்றுகிறீர்கள்: சபையின் பழக்கம் அல்லது வேதத்தின் போதனைகள்?

அந்நியபாஷையில் பேசுவது என்பதன் அர்த்தம் என்ன? *1 கொரி 14:13*
ஏன் சில சீஷர்கள் அந்நியபாஷையில் பேசினார்கள்?
சொல்லப்பட்டது என்ன என்பதன் அர்த்தத்தை விளக்க அவர்கள் ஏன் விண்ணப்பம் பண்ணுகிறார்கள்?

உங்களுக்கு தெரியாத ஒரு மொழியில் உங்களால் ஜெபிக்க முடியுமா? ஏன்? *1 கொரி 14:14*
உங்களுக்கு தெரியாத மொழியில் ஒரு காகிதத்தில் ஜெபவிண்ணப்பம் இருந்தால் அதை யார் புரிந்துகொள்வார்கள்: தேவனா அல்லது நீங்களா?
உங்களுக்கு தெரிந்த மொழியில் நீங்கள் ஜெபிக்கும்போது ஏன் உங்களுடைய கருத்து பயனுள்ளதாயிருக்கும்?

ஜெபம் என்றால் என்ன? *1 கொரி 14:15*
நீங்களும் தேவனும் புரிந்துகொள்ளும் மொழியில் நீங்கள் பேசுகிறீர்களா?
நீங்கள் தேவனிடத்தில் ஜெபிப்பதற்க்கு எந்த மொழியை சிறந்ததாக உணருகிறீர்கள்?

**நாள் 20**

உங்களுக்காக தொடர்ந்து ஜெபிப்பவர் யார்? *2 கொரி 1:10-11*
தனக்காக ஜெபிக்கும்படி பவுல் எதற்க்காக கொரிந்தியர் சபையிடம் கேட்டுக்கொண்டார்?
உங்களுக்காக ஜெபிக்கும்படி மற்றவர்களிடம் நீங்கள் கேட்பீர்களா? ஏன்?

இயேசு கிறிஸ்துவாகிய தேவகுமாரனானவர் தன்னுடன் சேர்ந்து ஜெபிக்குமாறு ஏன் தன்னுடைய மூன்று சீஷர்களிடம் கேட்டுக்கொண்டார்? *2 கொரி 1:10-11*
உங்களுக்காக அதிக நபர்கள் ஜெபிக்கும்போது தேவன் அதிகமாக பதிலளிப்பவராயிருக்கிறார். கலந்துரையாடவும்.
உங்களுடைய ஜெபங்கள் பதிலளிக்கப்பட்ட பிறகு அவற்றிற்க்காக நீங்கள் தேவனுக்கு நன்றி செலுத்தியிருக்கிறீர்களா? ஏன்?

உங்களுக்காக மக்கள் ஜெபிக்கும்போது அவர்கள் உங்களை அன்பு செலுத்துகிறார்கள். இதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா? *2 கொரி 9:14*
நீங்கள் பிறருக்காக ஜெபிக்கும்போது உங்களுடைய இருதயம் அவர்களோடு இசைந்து இருக்கிறது. விவரிக்கவும்.
நீங்கள் பிறருக்காக செய்யும் மிகப்பெரிய சேவை என்னவெனில் நீங்கள் அவர்களுக்காக ஜெபிப்பதுதான். ஏன்?

பாவத்தில் விழாமலிருக்கும்படியான பெலன் நம்மிடத்தில் இல்லை. விவரிக்கவும். *2 கொரி 13:7*
எந்த தவறும் நாம் செய்யாதபடிக்கு இருக்க தேவன் மாத்திரமே நமக்கு உதவி செய்ய முடியும். இதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா?
நீங்கள் யாருக்காக தொடர்ந்து ஜெபித்துக்கொண்டிருக்கிறீர்கள்? தயவு செய்து அதனை அவர்களிடம் தெரிவிக்கவும்.

நீங்கள் பரிபூரணமானவரா? உங்களுடைய ஜெபம் பரிபூரணமாயிருக்கின்றதா? *2 கொரி 13:9*
பவுலைப்பொறுத்தவரை எது உங்களை நற்சீர்பொருந்தப்பண்ணும்?
நமக்கு எப்பொழுது ஜெபம் தேவை? நாம் பலவீனராயிருக்கும்போதா அல்லது பலமுள்ளவராயிருக்கும்போதா? ஏன்?

தேவனுக்கு நன்றி செலுத்துவதா அல்லது அவரிடம் கேட்பதா எது சிறந்தது? *எபேசி 1:16*
எபேசுவிலே சபையை நிறுவியது யார்?
எபேசுவில் இருப்பவர்களுக்கு நன்றி செலுத்துவதை ஏன் பவுல் நிறுத்தவேயில்லை?

கடைசியாக எப்பொழுது நீங்கள் உங்களுடைய ஜெபத்தில் அழுதீர்கள்? ஏன்? ***எபேசி 1:18***
எபேசுவிலிருப்பவர்களுக்காக பவுல் என்ன வேண்டிக்கொள்கிறார்?
நீங்கள் இயேசு கிறிஸ்துவை அறியும் அறிவில் எவ்வளவு ஐஸ்வர்யமுள்ளவாராயிருக்கிறீர்கள்?

<u>நாள் 21</u>
உங்களிடத்தில் பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்? ***எபேசி 3:16***
நாம் பலமுள்ளவர்களாயிருந்து நமக்கு வரும் தூண்டுதல்களை மேற்கொள்வதற்க்கான வல்லமையை பரிசுத்த ஆவியானவர் அளிக்கின்றார். அது உங்களுடைய வாழ்க்கையில் உண்மையா?
தேவனுடைய மகிமையின் ஐசுவரியத்தில் நீங்கள் பங்குள்ளவராயிருக்கிறீர்களா?
மகிமையின் ஐசுவரியம் என்பவைகள் எவை?

உங்களுடைய இருதயத்தில் பரிசுத்த ஆவியானவரும் கிறிஸ்துவும் இருக்கிறார் என்று உங்களுக்கு தெரியுமா? ***எபேசி 3:17***
அன்பிலே எவ்வாறு வேரூன்றி இருக்கமுடியும்? வசனம் 18, 19 வாசிக்கவும்.
அன்பிலே நிலைபெற்றவர்களாயிருப்பது என்பதன் அர்த்தம் என்ன? வசனம் 18, 19 வாசிக்கவும்.

ஒரு நாளில் எத்தனை முறை நீங்கள் ஜெபிப்பீர்கள்? ***எபேசி 6:18***
ஆவியிலே ஜெபிப்பது என்பதன் அர்த்தம் என்ன?
எத்தனை வகையான ஜெபங்களும் விண்ணப்பங்களும் இருக்கின்றன?

உங்களுடைய குடும்ப சபையிலிருக்கும் சீஷர்களுக்காக நீங்கள் ஜெபிக்கிறீர்களா? ***எபேசி 6:18***
நீங்கள் ஜெபிக்கும்போது விழிப்புடன் இருக்கிறீர்களா? ஏன்?
நாம் எப்பொழுதும் எல்லா பரிசுத்தவான்களுக்காகவும் தொடர்ந்து ஜெபிக்கவேண்டுமென ஏன் பவுல் கூறுகிறார்?

உங்களுடைய தலைவர்களுக்காக நீங்கள் ஜெபிக்கிறீர்களா? ***எபேசி 6:19***
பவுலைப்பொறுத்தவரை உங்களுடைய தலைவர்களுக்காக நீங்கள் எதைக்குறித்து ஜெபிக்கவேண்டும்?
பவுல் பயத்துடன் காணப்படுகிறாரா? உங்களுக்கு அது எப்படி தெரியும்?

ஸ்தானாபதி என்பதன் அர்த்தம் என்ன? ***எபேசி 6:20***
எபேசுவில் இருப்பவர்களிடத்தில் ஏன் பவுல் இரண்டாவது முறையும் ஜெபிக்கும்படி கேட்டுக்கொள்கிறார்?
இயேசுவைப்பற்றி பேசுவதில் உங்களுக்கு பயம் இருக்கிறதா? உங்களுடன் இணைய ஒரு நபர் உண்டு - பவுல்.

உங்களுடைய ஜெபங்களில் நீங்கள் பாடுவீர்களா? ஏன்? ***பிலி 1:4***
நீங்கள் ஜெபிக்கும்போது எப்படிப்பட்ட உணர்வுகள் உங்களுக்கு இருக்கும்?
எல்லா பரிசுத்தவான்களுக்காகவும் சந்தோஷத்துடன் ஏன் பவுல் ஜெபிக்கிறார்? வசனம் 5, 6 வாசிக்கவும்.

<u>நாள் 22</u>
அன்புசெய்ய கற்றுக்கொள்வது என்பது நமக்கு மிக முக்கியமானதா? ***பிலி 1:9***
நாம் அன்புசெய்ய எப்படி கற்றுக்கொள்வது? நாம் எதற்க்காக ஜெபிக்கவேண்டும்?
உங்களுடைய வேத வாசிப்பில் நீங்கள் என்ன உட்கருத்தை பெற்றீர்கள்?

மக்கள் ஏன் எல்லாவற்றைக்குறித்தும் கவலைப்படுகிறார்கள்? *பிலி 4:6*
கவலையுடன் இருப்பவர்களுக்கான தீர்வு என்ன?
ஜெபம் மற்றும் விண்ணப்பம் இவற்றிற்க்கிடையேயுள்ள வேறுபாடு என்ன?

நீங்கள் எந்த சில நபர்களுக்கு நன்றியுள்ளவராயிருக்க நினைக்கிறீர்கள்? ***கொலோ 1:3***
நீங்கள் அந்த நபர்களுக்கு நன்றி சொல்கிறீர்களா அல்லது தேவனுக்கு நன்றி சொல்கிறீர்களா?
பிறருக்காக நாம் ஏன் தேவனுக்கு நன்றி சொல்லவேண்டும்?

நீங்கள் ஊழியக்குழுவில் செல்ல விரும்புகிறீர்களா? ஏன்? ***கொலோ 1:9***
எந்த ஊழியக்குழுவிற்க்காக நீங்கள் ஜெபிக்கிறீர்கள்?
இயேசு கிறிஸ்துவை அறியும் அறிவில் வளரும்படியாக நாம் ஏன் ஜெபிக்கவேண்டும்?

அன்னை தெரசாள் எந்த காரியத்தில் அர்ப்பணிப்புடன் காணப்பட்டார்? ***கொலோ 4:2***
நீங்கள் எந்த காரியத்தில் அர்ப்பணிப்புடன் இருக்கிறீர்கள்?
நாம் எவ்வாறு விழித்திருப்பது?

எல்லோருமே வேதத்தை கவனித்து கேட்பார்களா? ஏன்? ***கொலோ 4:3***
நாம் ஏன் திறந்த கதவுகளுக்காக ஜெபிக்கவேண்டும்?
கதவுகளை யார் திறப்பது?

நீங்கள் யாரையாவது அழைத்தால் அவரிடம் இயேசுவைப்பற்றி என்ன கூறுவீர்கள்? ***கொலோ 4:4***
நம்முடைய போதனையானது ஏன் தெளிவாக இருக்கவேண்டும்?
சமீபத்தில் உங்களுடைய குடும்ப சபையில் யார் ஞானஸ்நானம் பெற்றார்?

<u>நாள் 23</u>
நீங்கள் உங்களுடைய பிள்ளைகளுடன்/அப்பாவுடன் மல்யுத்தம் செய்ததுண்டா? யார் வெற்றி பெறுவார்கள்? ***கொலோ 4:12***
ஒரு நல்ல அப்பா தன்னுடைய பிள்ளையுடன் மல்யுத்தம் விளையாடும்போது எப்பொழுதுமே தோற்றுவிடுவார். கலந்துரையாடவும்.
நீங்கள் மல்யுத்தம் (போராடும்) செய்யும்போது விட்டுக்கொடுப்பது கிடையாது.
ஒருபொழுதும் ஜெபத்தை விட்டுவிடாதீர்கள்.

உங்களுடைய குடும்ப சபையிலிருக்கும் எல்லா சீஷர்களின் பெயர்களும் உங்களுக்குத் தெரியுமா? 1***தெச 1:2***
ஜெபம் செய்யும்போது எதற்க்காக பெயர்களை கூறி ஜெபிக்கவேண்டும்?
எந்த பெயர் உங்களுக்கு மிகவும் பிடித்தமானது? ஏன் உங்களுடைய பெயர் இல்லை?

இரவும் பகலும் தொடர்ந்து ஜெபிப்பது என்பது சாத்தியமா? ஏன்? ***1 தெச 3:10***
உங்களுடைய அப்பா மற்றும் அம்மாவைக் குறித்து எவ்வளவு அதிகம் நினைப்பீர்கள்?
அவர்களுக்காக எவ்வளவு அதிகம் ஜெபிக்கிறீர்கள்?

வேதத்திலிருக்கும் இரண்டாவது சிறிய வசனம் எது? ***1 தெச 5:17***
எப்பொழுது நீங்கள் இடைவிடாமல் ஜெபிப்பீர்கள்?
நீங்கள் இடைவிடாமல் ஜெபிக்கும்போது தேவனுடனான உங்களது உறவு எவ்வாறு இருக்கும்?

உங்களுக்காக யாராவது ஜெபிக்கவேண்டுமென்றால் அவர்கள் எதைக்குறித்து ஜெபிக்கலாம்? ***1 தெச 5:25***
நீங்கள் மற்றவர்களுக்காக ஜெபிப்பதை விரும்புகிறீர்களா?
உங்களுக்காக தொடர்ந்து ஜெபிப்பது யார்?

தேவன் ஏன் உங்களை தன்னுடைய சீஷராக தெரிந்துகொண்டார்? *2 தெச 1:11-12*
உங்களுக்கு இருக்கும் ஆத்மீகமான கனவு (விருப்பம்) என்ன?
அந்த (விருப்பம்) கனவுகளுக்காக ஜெபித்துக்கொண்டிருப்பது யார்? பவுல் செய்தார்.

நீங்கள் உங்களது வேலை செய்யும் / படிக்கும் இடத்தில் செய்யக்கூடிய ஒரு ஆத்மீகமான செயல் என்ன? *2 தெச 1:11-12*
வேலை செய்யும் / படிக்கும் இடத்தில் நீங்கள் ஜெபிப்பதை பிறர் பார்க்கமுடிகிறதா?
நீங்கள் வேலை செய்யும் / படிக்கும் இடத்தில் இருக்கும் ஒரு நபரின் பெயரை குறிப்பிடவும். உங்களால் அவருக்காக தினமும் ஜெபிக்கமுடியுமா?

## நாள் 24

நீங்கள் எவ்வளவு அதிகமாக தேவசெய்தியை பரப்புகிறீர்கள்? 2 *தெசலோ 3:1*
நீங்கள் யாருக்கு வேதாகமத்தை போதித்துக்கொண்டிருக்கிறீர்கள்?
நீங்கள் தேவசெய்தியை எவ்வாறு கனப்படுத்துகிறீர்கள்?

வேதாகமத்தின் நற்செய்தியை மற்றவர்களுக்கு அறிவித்ததினால் அடிவாங்கிய நபர்கள் யாரேனும் உங்களுக்குத் தெரியுமா? 2 *தெசலோ 3:2*
துர்க்குணராரிடத்திலும் பொல்லாதவர்களிடத்திலும் விசுவாசம் இல்லை. இதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா?
இந்த வாரம் இயேசுவிற்க்காக துன்பப்பட்ட ஒரு நபரை உற்சாகப்படுத்துங்கள்?

எல்லோருக்காகவும் ஜெபிப்பது என்பது சாத்தியமா? *1 தீமோ 1:1*
விண்ணப்பம், ஜெபம், வேண்டுதல் மற்றும் ஸ்தோத்திரம் என்பவற்றிற்க்கிடையேயுள்ள வேறுபாடு என்ன?
மேலே குறிப்பிடப்பட்டுள்ள எந்த காரியத்தில் நீங்கள் சிறந்தவர்?

துப்பாக்கியை காட்டும்பொழுது ஏன் ஒரு நபர் தன்னுடைய கைகளை உயர்த்துகிறார்? *1 தீமோ 2:8*
உங்களுடைய ஜெபமானது தேவனிடத்தில் சரணடையும்விதமாக இருக்கிறதா?
நீங்கள் தேவனிடத்தில் எவ்வாறு சரணடையலாம்?

பரிசுத்தமாக்கப்படுதல் என்பதன் அர்த்தம் என்ன? *1 தீமோ 4:5*
நீங்கள் காலையில் முதலில் பரிசுத்தப்படுத்தும் காரியம் எது?
தேவனிடத்தில் உங்களுடைய நேரத்தையும் பணத்தையும் பரிசுத்தப்படுத்த முடியுமா?

உங்களுடைய குடும்பத்தில் இருக்கும் யாராவது ஒரு விதவையின் பெயரை குறிப்பிடவும். *1 தீமோ 5:5*
தேவனுக்கு ஏன் விதவையானவர்கள் விசேஷமானவர்களாயிருக்கிறார்கள்?
சபையிலிருக்கும் விதவையானவர்கள் எப்படிப்பட்டவர்கள்?

உங்களுடைய தகப்பனார் மற்றும் தாயார் எந்த விதத்தில் தேவனுக்கு சேவை செய்தனர்? *2 தீமோ 1:5*
உங்களுடைய தகப்பனார் மற்றும் தாயார் தேவனுக்கு சேவை செய்ததுபோல் நீங்கள் செய்கிறீர்களா?
வேதாகமத்தில் தேவனுக்கு சேவை செய்த ஒரு நபரின் பெயரை குறிப்பிடவும்?

## நாள் 25

உங்களுடைய வாழ்க்கையில் தேவன் செய்த ஒரு தீமையான காரியத்தை பகிர்ந்துகொள்ளவும். *பிலேமோன் 6*
சுவிசேஷத்தை அறிவிப்பதில் எதற்க்காக நம்முடன் ஒரு கூட்டாளி தேவைப்படுகிறார்?
நம்மிலுள்ள சகல நன்மைகளும் தெரியப்படுகிறதினாலே கிறிஸ்துவினிமித்தம் அது பயனுள்ளதாயிருக்கும்படி நாம் ஏன் ஜெபிக்கவேண்டும்?

உங்களுக்கு கடைசியாக பதிலளிக்கப்பட்ட ஜெபம் எது? *பிலேமோன் 22*
தேவன் கடினமான ஜெபத்திற்க்கா அல்லது சுலபமான ஜெபத்திற்க்கா எதற்க்கு பதிலளிப்பார்?
பிலேமோனுடைய ஜெபம் என்னவாயிருந்தது?

கடைசியாக எப்பொழுது நீங்கள் உங்களுடைய ஜெபத்தில் கண்ணீர் விட்டீர்கள்? *எபிரெயர் 5:7*
இயேசு எதற்க்காக தன்னுடைய ஜெபத்தில் கண்ணீர்விட்டார்?
இயேசு யாரிடத்தில் கீழ்படிந்தவராயிருந்தார்? ஏன்?

நான் ஏன் பிறருக்காக ஜெபிக்கவேண்டும்? *எபிரெயர் 13:18*
நீங்கள் சபையிலிருக்கும் தலைவர்களுக்காக ஏன் ஜெபிக்கவேண்டும்?
நீங்கள் அரசியல் தலைவர்களுக்காக ஏன் ஜெபிக்கவேண்டும்?

நீங்கள் பலவீனமுள்ளவர்களுக்காக ஏன் ஜெபிக்கவேண்டும்? *எபிரெயர் 13:19*
உங்களுடைய குடும்பசபையில் கூட்டங்களைத் தவறவிடும் சீஷர்களுக்காக நீங்கள் ஜெபிக்கிறீர்களா?
உங்களுடைய வழிநடத்துனருக்காக நீங்கள் ஜெபிக்கிறீர்களா?

ஜெபிப்பதற்க்கு மிகவும் கடினமான ஒரு காரியம் எது? *யாக் 5:13*
நீங்கள் சமீபத்தில் ஏதாவது துன்பத்திற்க்குள் சென்றீர்களா? என்ன நேரிட்டது?
நீங்கள் எப்பொழுது துதிக்கும் பாடலை பாடுவீர்கள்?

நீங்கள் ஒரு வியாதிப்பட்ட நபருக்காக ஜெபம்செய்து அவர் குணமானதுண்டா? ஏன்? *யாக் 5:14*
சபையில் உங்களுக்கு மூப்பர்கள் இருக்கிறார்களா? ஏன்?
நம்முடைய சபையில் மூப்பர்கள் உருவாகவேண்டுமென தயவுசெய்து ஜெபியுங்கள்.

## நாள் 26

நீங்கள் ஒரு வியாதிப்பட்ட நபரை சென்று சந்தித்து அவருக்காக ஜெபம்செய்ய முடியுமா? *யாக் 5:15*
ஒரு வியாதிப்பட்ட நபருக்காக ஜெபம்செய்ய ஏன் நமக்கு விசுசாசம் தேவைப்படுகிறது?
வியாதியானது பாவத்துடன் தொடர்புடையதா? ஏன்?

நீங்கள் உங்களுடைய பாவத்தை முதலில் யாரிடம் அறிக்கையிடுவீர்கள்? ஏன்? *யாக் 5:16*
நீங்கள் உங்களுடைய பாவத்தை அடுத்ததாக யாரிடம் அறிக்கையிடுவீர்கள்? ஏன்?
பாவமானது எவ்வாறு உடல்நலத்தை பாதிக்கிறது?

நமக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் இடையேயுள்ள வேறுபாடு என்ன? *யாக் 5:17*
எலியாவினால் எவ்வாறு மழையை நிறுத்தவும் மற்றும் மீண்டும் கொண்டுவரவும் முடிந்தது?
நீங்கள் ஒரு வியாதிப்பட்ட நபருக்காக ஜெபம்செய்து அந்த ஜெபத்திற்க்கு தேவன் பதிலளிப்பார் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?

நீதி என்பது தேவனை சார்ந்து மற்றும் அவரை நம்புவதாகும். *யாக் 5:16-17*
உங்களுடைய ஜெபத்திற்க்கு கிடைக்கும் பதிலானது நீங்கள் எந்த அளவிற்க்கு தேவனுடன் தொடர்புடையவர்களாயிருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது?
நம்முடைய ஜெபத்தின் வல்லமை மற்றும் அதன் திறன் என்பது நாம் தேவனுடன் எந்த அளவிற்க்கு உறவுமுறையில் இருக்கிறோம் என்பதைப் பொறுத்தது?

சபையிலிருக்கும் சீஷர்களுடன் உங்களது உறவுமுறை எவ்வாறு இருக்கிறது? *1 பேதுரு 3:8-9*
நீங்கள் யாரை அதிகம் அன்பு கூறுகிறீர்கள்?
நீங்கள் பழிக்கும் அல்லது வெறுக்கும் நபர் யாராவது உண்டா? நீங்கள் யாரிடத்திலாவது ஆசீர்வாதமான வார்த்தைகளை கூறியதுண்டா அல்லது சபித்ததுண்டா?

நீங்கள் யாரை அதிகம் அன்பு கூறுகிறீர்களோ அவரிடத்தில் மிகவும் கூர்ந்து கவனித்து கேட்பீர்கள்? ஏன்? *1 பேதுரு 3:12*
தேவனுடைய கண்கள் உங்கள்மீது நோக்கமாயிருக்கிறது. நீங்கள் அதைக்குறித்து மகிழ்ச்சியடைகிறீர்களா அல்லது பயப்படுகிறீர்களா?
நீங்கள் தேவனுடைய முகத்தை தினமும் பார்க்கிறீர்களா? எங்கே?

நீங்கள் மரிக்கத் தயாரா? ஏன்? *1 பேதுரு 4:7*
நீங்கள் சீக்கிரத்தில் மரிக்கப்போகிறீர்கள் என்று அறிந்திருந்தால் நீங்கள் எவ்வாறு ஜெபிப்பீர்கள்?
தெளிந்தபுத்தியுடன் மற்றும் ஜாக்கிரதையுடன் என்பதன் அர்த்தம் என்ன?

<u>நாள் 27</u>
மரணத்திற்க்கேதுவாக வழிநடத்தும் பாவம் எது? *1 யோவான் 5:16*
பாவத்தில் பிறர் விழும்பொழுது நீங்கள் அவர்களுக்காக ஜெபிப்பீர்களா? ஏன்?
நீங்கள் பாவத்தில் விழுந்தால் உங்களுக்காக யார் ஜெபிப்பார்?

உங்களிடத்தில் ஆத்துமா இருக்கிறதா? அது உங்களுக்கு எப்படித் தெரியும்? *3 யோவான் 1:2*
நீங்கள் மற்றவர்கள் வியாதிப்பட்டிருக்கும்பொழுது அவர்களுக்காக ஜெபித்திருக்கிறீர்களா? ஏன்?
உங்களுடைய ஆத்துமா வியாதிப்பட்டிருக்கிறதாஅல்லது ஆரோக்கியமாயிருக்கிறதா? அது உங்களுக்கு எப்படித் தெரியும்?

உங்களிடத்தில் பரிசுத்த ஆவியானவர் இருக்கிறாரா? அது உங்களுக்கு எப்படித் தெரியும்? *யூதா 1:20*
பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணுதல் என்பதன் அர்த்தம் என்ன?
நீங்கள் ஜெபம்செய்வதற்க்கு பரிசுத்த ஆவியானவர் உதவுகிறாரா அல்லது நீங்கள் உங்கள் சொந்தமாகவே ஜெபிக்கிறீர்களா?

தூபவர்க்கம் என்பது என்ன? *வெளி 5:8*
நம்முடைய ஜெபத்தை தேவன் எவ்வாறு பார்க்கிறார்? அது நல்ல மணமா அல்லது கெட்ட மணமா?
பெற்றோர்கள் தன்னுடைய பேசத்துவங்கும் குழந்தையிடம் பேசுவதற்க்கு மிகவும் மகிழ்ச்சியாயிருப்பார்கள், அதைபோலத்தான் தேவனும் உணருவார் நாம் அவருடன் பேசும்போது?

உங்களுடைய வாழ்க்கையிலிருக்கும் மூப்பர்கள் யார்? *வெளி 4:10*
மூப்பர்கள் வயதுசென்றவர்களாயிருந்தபோதிலும் ஏன் அவர்கள் வணக்கமாய் விழுந்து தொழுதுகொண்டார்கள்?
நீங்கள் ஜெபிக்கும்போது உங்களுடைய தோற்றத்தின்நிலை எவ்வாறு இருக்கும்? அது உங்களுடைய தாழ்மையை வெளிக்காட்டுமா?

தேவதூதர்கள் என்பவர்கள் யார்? அவர்களுக்கு இறக்கையிருக்கிறதா? *வெளி 7:11*
தேவதூதர்கள் ஏன் தேவனை வழிபடுகிறார்கள்?
நாம் தேவதூதர்களை வழிபடலாமா?

நாம் ஏன் விக்கிரகங்களை வழிபடக்கூடாது? *வெளி 9:20*
யாராவது விக்கிரகாராதனை செய்யாமலிருக்க நீங்கள் அவர்களுக்கு உதவினீர்களா? ஏன்?
விக்கிரகங்களால் ஏன் பார்க்கவோ, கேட்கவோ அல்லது நடக்கவோ முடியாமலிருக்கிறது?

<u>நாள் 28</u>
அதிகாரம் இருக்கும் நபரை நாம் ஏன் மேலோங்கி பார்க்கிறோம்? *வெளி 13:7*
அதிகாரம் இருக்கும் ஒரு நபரை நாம் வழிபடலாமா?
நீங்கள் உங்கள் வாழ்க்கையில் மேன்மையாக கருதும் மற்றும் மாறாத ஒரு விஷயம் எது?

நீங்கள் இயேசுவைத்தான் வழிபடுகிறீர்களென்று உங்களுக்கு எப்படித் தெரியும்? *வெளி 13:8*
உங்களுடைய பெயர் ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறதா?
இன்று நீங்கள் மரித்தால் எங்கே செல்வீர்கள்?

நாம் யாரை வழிபடவேண்டும்? *வெளி 14:7*
நாம் ஏன் தேவனுக்கு பயந்திருக்கவேண்டும்?
நாம் தேவனுக்கு எந்தவிதத்தில் மகிமையை அளிக்கலாம்?

மக்கள் இப்பொழுது ஏன் தேவனுக்கு பயப்படாமலிருக்கிறார்கள்? *வெளி 15:4*
நியாயத்தீர்ப்பு நாளில் ஏன் மக்கள் தேவனுக்கு பயந்திருப்பார்கள்?
தேவன் உங்களது வாழ்க்கையில் செய்த எல்லா நன்மையான காரியத்தையும் வெளிப்படுத்தினாரென்றால் நீங்கள் எவ்வாறு உணருவீர்கள்?

நீங்கள் தேவதூதர்களை வழிபடலாமா? ஏன்? *வெளி 19:10*
யோவான் எதற்க்காக தேவதூதனை வழிபட முயன்றார்?
யோவானிடத்தில் பேசிக்கொண்டிருந்த தேவதூதனைப்பொறுத்தவரை தேவதூதர்கள் என்பவர்கள் யார்?

இயேசுவிற்க்காக மரித்த சில நபர்களின் பெயர்களை கூறவும்? *வெளி 20:4*
நீங்கள் இயேசுவிற்க்காக மரிக்கத் தயாரா? ஏன்?
நீங்கள் இயேசுவிற்க்காக வாழத் தயாரா? ஏன்?

ஒரே தவறை நீங்கள் மீண்டுமாக செய்யும்பொழுது என்ன நேரிடுகிறது? *வெளி 22:8-9*
யோவான் எதற்க்காக மீண்டும் தேவதூதனை வழிபட முயன்றார்?
நீங்கள் எதைக்குறித்து வியந்துபோகிறீர்களோ அதை வழிபடுவீர்கள். நீங்கள் தேவனை அவ்வாறு வியந்ததுண்டா?

- **இந்த மாதம் உங்களுடைய ஜெப வாழ்க்கை எவ்வாறு இருந்தது?**
- **நீங்கள் உங்களுடைய ஜெபத்திற்க்கு 1 லிருந்து 10 வரை மதிப்பிடவேண்டுமெனில் எந்த மதிப்பெண்ணை அளிப்பீர்கள்? 10 - மிக சிறப்பு / 1 - மிக மோசம்?**
- **தனிப்பட்ட விதமாக தேவனிடத்தில் தினந்தோறும் பேசுவதற்க்கு முடிவெடுங்கள். எவ்வளவு நேரம் பேசப்போகிறீர்கள்?**

உங்களுடைய ஜெப வாழ்க்கை சிறப்பாக இருக்கும்போது உங்களுடைய கிறிஸ்துவ வாழ்க்கை மிகவும் சிறப்பாக இருக்கும். தொடர்ச்சியாக நாம் சங்கீதம் புத்தகத்தை வாசித்து தாவீது தேவனிடத்தில் எவ்வாறு ஒரு பலமான உறவு வைத்திருந்தாரோ அதேபோன்று ஒரு உறவு முறையை நாம் வைப்பதற்க்கு முயல்வோம். ***ஆமென்.***